# பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளுக்கு மத்தியில் இடைவேளை

## I. அறிமுகம்—வரலாற்றுப் பெரும் பிளவு—தகவலின் ஆதார மூலங்கள்.

பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளுக்கு மத்தியில் நானூறு ஆண்டுகளுக்கு ஒரு பெரும் பிளவு நீண்டு விரிந்துள்ளது. அந்த நூற்றாண்டுகளின் போது, கிரேக்க நாடானது இலக்கியத்திலும் கலையிலும் தனது தலைசிறந்த படைப்புகளை உண்டாக்கியது; கிரேக்கப் படைகளின் வலிமையை அலெக்சான்டர் (உலகம் எங்கும்) எடுத்துச் சென்றார் மற்றும் கிரேக்கக் கலைகளின் மிகவும் பயனுள்ள வல்லமையானது மேற்கு ஆசியா முழுவதிலும் அவரால் எடுத்துச் செல்லப்பட்டது; தைபர் நதியோரம் இருந்த எல்லைப் புறநகரான ரோமாபுரி “மத்திய தரைக்கடல் பகுதியின் மிகப் பெரும் முடியாட்சி”யாக வளர்ந்திருந்த வேளையில், இது ரோமச் சாலைகளுக்கான தனது மிகப் பெரும் விரிவாக்கம், ரோமச் சட்டங்கள், ரோம நாகரீகம் ஆகியவற்றுடன் தன்னையறியாமலேயே தேவனுடைய நீதியின் அரசுக்கு இன்னும் மாபெரும் விரிவாக்கத்திற்கான வழியைத் தயார் செய்து கொண்டிருந்தது. இந்த நூற்றாண்டுகளின்போது எபிரெய தீர்க்கதரிசியின் குரலும் ஏவப்பட்ட எழுத்தாளரின் எழுதுகோலும் ஒன்று போல மௌனமாயிருந்தன. (இக்காலகட்டத்தில் நடைபெற்ற) யூதர்களின் நடவடிக்கை பற்றிய நமது அறிவுக்கு நாம் பின்வரும் மூன்று முதன்மை ஆதார மூலங்களையே சார்ந்துள்ளோம். அவை யாவன:

***1. பழைய ஏற்பாட்டுத் தள்ளுபடியாகமங்கள்.***—இவைகள் இந்தக் காலகட்டத்தில் எழுதப்பட்ட யூத பதிவேடுகளும், பழைய ஏற்பாட்டிற்கு ஏவுதல் பெற்றிராத ஒரு பின் இணைப்புமாகும். இவைகள் கால வரலாற்றின் மீது கணிசமான வெளிச்சத்தை வீசுகின்றன, ஆனால் அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட நூல்கள் என்ற வகையில் இருந்து வெகு தொலைவில் கீழே வீழ்ந்துள்ளன. எகிப்தின் நினைவுச் சின்னங்களும், பாபிலோனின் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட செங்கற்களும், நினிவேயின் களிமண் பலகைகளும் மற்றும் ஏராளமான பிற கண்டுபிடிப்புகளும் வேதாகம பதிவுகளின் வரலாற்று ரீதியான மிகச் சரியான தன்மையை அதிகமதிகமாய் உறுதிப்படுத்திக் கொண்டிருக்கையில், தள்ளுபடியாகம எழுத்துக்களில்

வழுவிச் செல்லுதல்கள் ஏராளமாய் இருப்பதாக நிரூபிக்கப்பட்டுள்ளது, மற்றும் பிற வரலாற்று தவறுகளும் புவியியல் தவறுகளும் இவற்றில் ஏராளமாய் இருப்பதாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளது. மக்காபேயர்களின் முதல் புத்தகமானது வரலாற்று ரீதியாக மிகவும் மதிப்புள்ள தொகுப்பாக உள்ளது.

***2. யோசிப்பஸ்ஸின் எழுத்துக்கள்.***—யோசிப்பஸ் என்பவர் கி.பி. 37ல் பிறந்த யூத வரலாற்றாளர் ஆவார். இவர் தீத்துவினால் எருசலேம் கைப் பற்றப்பட்டு அழிக்கப்பட்டபோது தப்பித்து பின்வரும் தலைப்புக்களில் முக்கியமான இரு புத்தகங்களை எழுதினார். படைப்பு நடந்ததிலிருந்து முழுமையான, வரலாற்றைக் கூறும் "யூதர்களின் பண்டைக்காலம்" மற்றும் கி.மு. 170ல் இருந்து தம் சொந்தக் காலம் வரை தமது சொந்த மக்களின் வரலாற்றைக் கூறுகின்ற "யூதர்களின் யுத்தங்கள்."

***3. கிரேக்க மற்றும் ரோமானிய எழுத்தாளர்கள்.***

## II. அரசியல் ரீதியான காலகட்டங்கள்.

அரசியல் வரலாறு ஆறு கால கட்டங்களைக் கொண்டதாக இருக்கிறது, அவை.: (1) பெர்ஸியர்கள்; (2) மக்கெதோனியர்; (3) எகிப்தியர்; (4) சீரியர்; (5) மக்கபெயர் அல்லது சுயாதீனர்; (6) ரோமர்.

***1. பெர்ஸியரின் காலகட்டம்*** (கி.மு. 538-332).—இந்தக் காலகட்ட மானது மகா கோரஸினால் பாபிலோன் பிடிபட்டு அதன் விளைவாக யூதர்களின் அரசப்பற்றானது பெர்சியரின் வல்லமை/அதிகாரம் நோக்கி மாற்றப்பட்டதிலிருந்து தொடங்குகின்றது. ஆகையால் இந்தக் காலகட்டத் தின் பெரும்பகுதியானது பழைய ஏற்பாட்டு வரலாற்றில் சிறையிருப்பின் பிந்திய காலகட்டத்தினால் கூறி முடிக்கப்படுகின்றது. பெர்ஸியர்களுக்குக் கீழ், யூதர்கள் வழக்கமாகத் தங்கள் சொந்தப் பிரதான ஆசாரியரால் ஆளப்பட்டார்கள், இவர் சீரியாவின் சாத்ராப் அல்லது ஆளுநருக்குக் கீழ்ப்பட்டிருந்தார். மொத்தத்தில் பெர்ஸியரின் ஆளுகை மென்மையான தாக இருந்தது. சமாரியர்களுடன் இடர்ப்பாடுகள் தொடர்ந்தன. இவர்கள் பத்து கோத்திரங்களில் எஞ்சியிருந்தவர்கள், குடியமர்த்தப்பட்ட அசீரியர்களுடன் கலப்புறவு கொண்டவர்கள் என்பது நினைவு கூறப்பட வேண்டும். இவர்கள் அடிக்கடி நிலைமாறிய யூதர்களினால் மறுவலிவூட்டப் பட்டனர், அவர்களில் ஒருவராக, கி.மு. 400ல் கெரீசிம் மலையின்மீது ஆலயம் கட்டிய மனாசே என்ற ஆசாரியர் ஒருவரும் இருந்தார் (இ.வ. யோவா. 4:20). சமாரியர்கள் பஞ்சாகமத்தை உரிமையாய்க் கொண்டிருந் தார்கள், தேவன்மீது விசுவாசம் வைத்திருந்தார்கள், பலிகளைச் செலுத்தி னார்கள், மற்றும் மேசியாவுக்காக எதிர்நோக்கியிருந்தார்கள். அவர்களின் மதமானது வழுவிச் சென்ற யூதத்துவம் என்று விவரிக்கப்படலாம்.

***2. மக்கெதோனியர்களின் காலம்*** (கி.மு. 332-323).—கி.மு. 334ன் வசந்த காலத்தில், அலெக்சான்டர் தனது கைப்பற்றுதல்களின் ஈடு இணையற்ற வரிசைத் தொடரில் (ஒரு பகுதியாக) ஆசியாவைக் கடந்தார். கிரேனிகஸ் ஸிலும் இஸ்ஸஸிலும் தரியுவை தோல்வியடையச் செய்த அவர் தீரு

நகரத்தாரின் விடாப்பிடியான ஏழு மாத எதிர்ப்புக்குப் பிறகு அந்நகரைக் கைப்பற்றி, எகிப்துக்குச் செல்லும் வழியில் பலஸ்தீனத்தை முழுவதுமாகக் கைப்பற்றிச் சென்றார். ஊர்வலம் ஒன்றின் முன்பகுதியில் பிரதான ஆசாரியரான ஜாதுவா என்பவர் இருந்தது பற்றிய ஆர்வமிக்க வரலாறு ஒன்றை யோசிப்பஸ் கூறுகின்றார். அவ்வாறு சென்ற அந்தப் பிரதான ஆசாரியர் எருசலேம் நகருக்கு வெளியே அலெக்சான்டரைச் சந்தித்தார்; மற்றும் அந்தக் காட்சியைக் கண்ட அலெக்ஸான்டர் வழக்கத்திற்கு மாறாக[1] எவ்வாறு பயபக்தியடைந்தார்; அவர் எவ்வாறு ஆலயத்தினுள் பிரவேசித்து, யூதர்களின் தேவனுக்குப் பலி செலுத்தினார்; மற்றும் அவர் எவ்வாறு மக்கெதோனியாவில் தாம் கண்ட கனவில் தாம் பெர்சியர்களை வெல்ல வேண்டும் என்று தமக்குக் கூறிய பிரதான ஆசாரியரின் கூற்றுக்கிணங்க தம் சேனைகளை வழக்கத்திற்கு மாறாக நடத்தினார்[2] என்பனவற்றையும் அவர் (யோசிப்பஸ்) விவரித்தார். எவ்வகையிலும், அலெக்சந்தரும் அவருடைய வழிவழி வந்தவர்களும், குடியமர்ந்தவர்கள்/குடியேறியவர்கள் என்ற வகையில் யூதர்களின் தகுதியினால்/மதிப்பினால் மனம் கவரப்பட்டார்கள்; ஏனெனில் அவர்கள் அலெக்சந்திரியா நகரானது ஏராளமான யூத மக்களின் மையமாகும்படியும், யூதக் கல்வியின் கொண்டாடத்தக்க இருக்கையாகும் படியும், நைல் நதிப் பகுதியில் யூதக் குடியமர்ந்தவர்களும் அப்படிப்பட்ட சலுகைகளைக் கொடுத்தார்கள்.

***3. எகிப்தியர்களின் காலம்*** *(கி.மு. 323-204).—கி.மு. 323ல்* அலெக்சான்டர் பாபிலோனில் இறந்தார். அவரது பேரரசைப் பிரித்தல் தொடர்பாக அவரது தளபதிகள் மத்தியில் இருபது ஆண்டுகளாக நடந்த குழப்பமான போராட்டத்திற்குப் பிறகு, ஒழுங்கமைவில் சில அளவீடுகள் உதித்தெழும்பின. ஆசிய மாகாணங்களின் பல பகுதிகளை செல்யூகஸ் (நிக்கோடர்) பெற்றுக் கொண்டார். அவர் கிழக்கில் இருந்த சூசா, பாபிலோன், தமஸ்கு போன்ற பழங்கால தலைநகர்களைக் கடந்து சென்ற பொழுது, மத்திய தரைக்கடல் அருகில் ஆரன்ட்ஸ் மீது அந்தியோகியா என்ற மேன்மைமிக்க நகரைக் கட்டியெழுப்பினார். அது முதல், இரண்டரை நூற்றாண்டுகள் காலத்திற்கு செல்யூஸிடே (செல்யூக்கஸின் பின் சந்ததிகள்) செல்வமிக்க சீரிய அரசை ஆண்டு வந்தார்கள், மற்றும் அங்கு (பல) நூற்றாண்டுகளாக ஆசியாவின் செல்வமும் கலாச்சாரமும் மையம் கொண்டிருந்தன.

தாலமி எகிப்தை வெற்றி கொண்டார், அதன் புதிய தலைநகராயிருந்த அலெக்சந்திரியா மிக விரைவில் கிழக்கில் வர்த்தகமும் இலக்கியமும் மேலோங்கிய பெரு நகராயிற்று. இவ்விரு அரசுகளும் நகரங்களும் நீண்ட காலமாகப் போட்டியில் இருந்தன. சீக்கிரமே தாலமி எருசலேமை செல்யூகஸிடமிருந்து கைப்பற்றினார். தாலமியின் கீழ் (யூதர்கள்) இருந்த நூற்றாண்டானது யூதர்களுப் பொதுவாக வளமையின் காலமாக இருந்தது. மாபெரும் அலெக்சந்திரிய நூலகத்திற்காக தாலமி பிலதெல்பஸின் கட்டளையின்படி எபிரெய வேத வசனங்கள் கிரேக்கில் மொழி பெயர்க்கப்பட்டது மிகவும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாயிருந்தது. இந்தப் பணி செய்தவர்களின் எண்ணிக்கை பற்றிய பாரம்பரியக் கூற்றின்படி இது

செப்துவஜிந்த் என்று அறியப்படுகின்றது.

***4. சீரியர்களின் காலம்*** *(கி.மு. 204-167).—பலஸ்தீனமானது எதிரெதிரான வல்லமைகளின் இடையில் விரோதத்தின் எலும்புத் துண்டாக மீண்டும் ஆயிற்று. கடைசியில் செலூக்கியர்கள் அந்நாட்டைத் தாலமியிட மிருந்து மீட்டுக் கொண்டார்கள். சீரியர்களின் ஆட்சிக் காலம் இந்த நான்கு நூற்றாண்டுகளிலும் மிகவும் இருளுள்ளதாக இருந்தாலும் மகிமை பொருந்தியதாகவும் இருந்தது. செல்லூக்கியர்கள் ஒழுக்கங்கெட்ட சர்வாதிகாரிகளாய் இருந்தார்கள். அவர்கள் எல்லாரிலும் அந்தியோகஸ் எப்பிபெனேஸ் (கி.மு. 175-164) மிக மிக மோசமானவனாயிருந்தான். ஒருமுறை எகிப்திலிருந்து அவன் தோல்வியுடன் திரும்பி வந்த பொழுது, எருசலேம் மீது தனது பழி தீர்த்துக் கொள்ளுதலை வெளிப்படுத்தினான். அதன் மக்கள் தொகையில் நாற்பதினாயிரம் பேரை அவன் கொன்று குவித்து, தேவாலயத்தின் பொக்கிஷங்களைச் சூறையாடி, பலிபீடத்தின்மீது ஒரு பெண் பன்றியைப் பலியிட்டதன் மூலமாகவும், சுத்தமற்ற (அந்த) மிருகத்தை வேக வைத்த தண்ணீரை தேவாலயத்தின் உட்புறத்தில் தெளித்த தின் மூலமாகவும் அவன் யூதர்களின் மத உணர்வைக் கொந்தளிக்கச் செய்தான். எபிரெய மதத்தையும் ஆவியையும் அழிப்பதற்கு அவன் ஒவ்வொரு வழிமுறையையும் நாடி, நாட்டை கிரேக்கர்களுடையது போல் மாற்றினான். அவன் தேவாலயத்தை மூடி, மரண வேதனையின் மூலம் யூத மதத்தைத் தடை செய்தான். திரளான மக்கள் தங்கள் விசுவாசத்திற்கு மாறாக தங்கள் வாழ்வை/உயிரைத் துணிவுடன் பலியாய்க் கொடுத்தார்கள். வீரார்ந்த இந்த எதிர்ப்பை வழிநடத்திச் சென்றவர்கள் மக்கபேயர்கள் என்று அறியப்பட்ட நாட்டுப்பற்றுள்ள ஆசாரியர்களாய் இருந்தார்கள்.*

***5. மக்கபேயர்களின் காலம்*** *(கி.மு. 167-63).—சுதந்திரத்திற்கான ஒரு யுத்தமானது மத்தத்தியாஸ் என்ற பெயர் கொண்ட வயதான ஆசாரியர் ஒருவரால் தொடங்கப்பட்டு, அவரது மகன்களால் முப்பது ஆண்டுகளாக நடத்தப்பட்டது. யூதர்களின் கட்டபொம்மன் என்று அழைக்கத் தகுதி பெற்ற யூதாஸ் என்பவர், தாமே போரிட்ட பத்துப் போர்களில், ஐந்து போர்களை வென்றார், மற்றும் "மக்காபே" (சுத்தியல்) என்ற பட்டத்தையும் வென்று அதைத் தமது குடும்பத்திற்கு உரியதாக்கினார். யூதாஸ் தேவாலாயத்தை மீண்டும் திறந்து, அதைச் சுத்திகரித்து, மீண்டும் அர்ப்பணம் செய்யுமளவுக்கு வெற்றி வீரராக விளங்கினார், அவரது நினைவைக் கனப் படுத்துவதற்காக பிரதிஷ்டை பண்டிகை தொடர்ந்து ஆசரிக்கப்பட்டு வந்தது (யோவா. 10:22). கடைசியில் யூதாஸ் ஒரு யுத்தத்தில் வீழ்ந்தார்; ஆனால் அவரது சகோதரனான சீமோன் என்பவரால் கடைசியில் கலகத்து டனான ஒரு சுதந்திரம் வெற்றிக் கொள்ளப்பட்டு, சீரியர்களால் அங்கிகரிக் கப்பட்டது. சீமோனின் மகனான ஜான் ஹிர்கானஸ் என்பவர் அரச பட்டத்துடன் அவருக்குப் பின் வந்தார். இவ்விதமாக மக்காபேயர்களின் மூதாதையரான ஹஸ்மோனஸ்[3] என்பவரின் நினைவாகப் பெயரிடப்பட்ட ஹஸ்மோனியன்[4] அரசாட்சி தோற்றுவிக்கப்பட்டது.*

***6. ரோமர்களின் காலம்*** *(கி.மு. 63-கி.பி. 70, பாம்ப்பே என்பவனால் எருசலேம் பிடிக்கப்பட்டதிலிருந்து தீத்துவால் அது அழிக்கப்பட்டது வரை).*

—மக்கெபேயர்கள் ஆட்சியின் முடிவு ஆண்டுகள் பரிதபிக்கப்படத்தக்க உள் நாட்டு விரோதங்கள்/சண்டைகள் நிறைந்த ஆண்டுகளாயிருந்தன. ஹஸ்மோனியன் குடும்பத்தின் பல்வேறு உறுப்பினர்கள் அரியணைக்காகப் போட்டியாளர்களாயினர்; சூழ்ச்சிகளும், எதிர் சூழ்ச்சிகளும், பரஸ்பரம் கொலைகளும் ரோமாபுரியின் எழுச்சியுற்றுக் கொண்டிருந்த அதிகாரத் தினிடம் வேண்டுகோள்களும் (அவர்களின்) வரலாற்றுக் குறிப்புகளைக் கறைப்படுத்தின. கி.மு. 63ல் மகா பாம்ப்பி என்பவன், மூன்றாம் மித்திரி டேட்டிக் யுத்தத்தின் முடிவில் வெற்றி பெற்ற தனது சேனைகளை சீரியாவுக்குள் நடத்திச் சென்று, செல்லூக்கியர்களின் அரசாட்சிக்கு முடிவு கட்டி, எருசலேமைக் கைப்பற்றியதினால் யூதர்களின் சுதந்திரமான அரசியல் வாழ்வுக்கான கடைசிக் கனல்களை அணைத்துப் போட்டான். சற்று காலத்திற்கு அஸ்மோனியர்கள் தைபரிலிருந்து வெளியிடப்பட்ட சர்வாதி கார வல்லமைக்கு, சீரியாவின் ரோம ஆளுநருக்குக் கீழ்ப்பட்டு உள்ளூர் ஆட்சியாளர்களாய்த் தொடர்ந்தனர்.

**ஏரோதியக் குடும்பம்.**—ஆனால் இப்பொழுது ஒரு புதிய தனிப்பட்ட/ ஆளுமை சக்தியானது காட்சிக்கு வருகின்றது. ஒரு நூற்றாண்டுக் காலத்திற்கு ஏரோதியரின் குடும்பமானது யூத வரலாற்றில் முக்கியமான பங்கு வகித்தது; இது இயேசு கிறிஸ்துவின் பிறப்பு மற்றும் ஊழியம் ஆகியவையும், சபையின் ஸ்தாபனமும் நடைபெற்ற முக்கியமான நூற்றாண்டாகும். மகா/பெரிய ஏரோது (கி.மு. 37-4) இதுமேய (ஏதோமியர்) வழி வந்தவர் ஆவார். இவரது தகப்பன் அந்திப்பத்தர் என்பவர் கி.மு. 47ல் யூதேயாவின் ஆளுநராக்கப் பட்டார். அதே வேளையில் ஏரோது கலிலேயாவின் ஆளுநராக்கப்பட்டார். கி.மு. 40ல் இவர் ரோம அரசவையினால் யூதேயாவின் அரசராக்கப் பட்டார், ஆனால் தமது அரசை அவர் வெற்றி கொள்ள வேண்டியிருந்தது, இதை அவர் கி.மு. 37ல் நிறைவேற்றினார். இவர் யூத ஆசாரிய - அரசரான ஹிர்கானஸின் பேத்தியான மிரியாம் என்ற பெண்மணியைத் திருமணம் செய்து கொண்டு, இவ்விதமாக அஸ்மோனிய பரம்பரையினருடன் அரியணைக்கான தமது சொந்த உரிமைகோருதல்களைப் பிணைத்தார்/ ஒன்றுபடுத்தினார். ஏரோது அரசிற்குக் கொண்டிருந்த மேதைத் தன்மைக்குச் சமமான ஒன்று மிக அரிதானதாயிருந்தது; ஆனால் அவரது குற்றங்கள் அதை விடப் பெரியவைகளாயிருந்தன. அவர், கீழ்த்தரமான நடக்கை, முழுமையான சிற்றின்பப் பிரியம், மற்றும் மதியற்ற சந்தேகம் ஆகியவற்றினால் மிகவும் அற்பத்தனமாய் நடந்து கொண்டார்; அவரது சாவுக்கேதுவான பொறாமைக்கு முன்பாக பலர் பலியாகினர்; அவரது மாமியார், மைத்துனர், இரு மகன்கள் மற்றும் அவரது சொந்த மனைவியும் அழகிய பெண்மணியுமான மிரியாம் ஆகியோர் இதில் அடங்கினர். அவர் பந்தயங்கள் மற்றும் பிற கிரேக்கப் பழக்கங்களை எருசலேமுக்குள் அறிமுகப் படுத்தியதன் மூலம் யூதர்களின் வெறுப்புக்குள்ளானார். அவர்களின் பார்வைக்கு இவற்றிற்குப் பரிகாரமாக அவர் தேவாலயத்தை மீண்டும் கட்டி, அதை சாலொமோனின் ஆலயத்தைப் பார்க்கிலும் மிகவும் பெரிதாக்கி, செருபாபேல் கட்டிய ஆலயத்தைப் பார்க்கிலும் வளம்மிக்க தாக்கினார். அவர் சமாரியா நகரையும் மீண்டும் கட்டியெழுப்பி அதற்கு

செபஸ்தே என்று பெயரிட்டு, செசரியா என்ற புதிய நகரத்தை நிர்மானித்து அதை பலஸ்தீனத்தின் அரசியல் தலைநகராக்கினார். "அவரது உறவினர் களின் இரத்தத்தினால் அவரது அரியணை குளிப்பாட்டப்பட்டிருந்தது" என்பது உண்மையாயிருப்பினும், அவர் தாவீது மற்றும் சாலொமோனின் ஆளுகைகள் தவிர அரசாட்சியானது முன்பு ஒருபோதும் அது அறிந்திராத அளவு வெளிப்படையான மாபெரும் மேன்மையைத் தந்தார். இருப்பினும், பொருள் சார்ந்த இந்த மேன்மை யாவையும் யூதர்களைப் பார்வையற்றுப் போகச் செய்யவில்லை, அவர்கள் கீழ்ப்படிதலுக்குட்பட்ட இனமாய் இருந்த போதிலும் தங்கள் பாரம்பரியம், தங்கள் மகிமையுள்ள கடந்த காலம் ஆகியவை குறித்துப் பெருமை கொண்டிருந்தார்கள். அவர்களின் விலங்குகள் மெருகூட்டப்பட்டிருக்கலாம்; ஆயினும் அவை இன்னமும் விலங்குகளாகவே இருந்தன. ஏரோது அரசரே கூட அந்நிய இனத்தைச் சேர்ந்தவராகவே இருந்தார், மற்றும் அவர் இன்னொரு அந்நிய இனத்தின் பிரதிநிதியாக அரசாண்டார். சொல்லப் போனால், தாவீதின் கூடாரம் விழுந்து போயிருந்தது, நாட்டின் தேர்ந்து கொள்ளப்பட்ட ஆவிகளான "இஸ்ரவேலருக்குள்ளான இஸ்ரவேலர்கள்" அதை (இஸ்ரவேல் நாட்டை) மீண்டும் மேலே எழுப்பி, முந்தின/பழைய நாட்களில் இருந்தது போல அதை கட்டி எழுப்புகின்றவருக்காக நோக்கியிருந்து ஏங்கியிருந் தார்கள் (ஆமோஸ் 9:11).

## III. வாழ்வு மற்றும் பழக்க வழக்கங்களில் மாற்றங்கள்.

***1. தொழில்.***—எபிரெயர்கள் தொடக்கத்தில் விவசாயிகளாகவும் மேய்ப்புப் பணி செய்பவர்களாகவும் இருந்தனர். சாலொமோன் மற்றும் சில பிற்கால அரசர்களின் நாட்களில் அவர்கள் அந்நிய (நாட்டு) வர்த்தகத் தில் ஓரளவுக்கு ஈடுபட்டார்கள். ஆனால் சிறையிருப்பில் இருந்து பரவலாகச் சிதறியிருந்தது அவர்களை வியாபாரிகளின் இனமாக்கிற்று, இது அவர்கள் ஒருக்காலும் இழந்து போகாத பண்பாயிற்று.

***2. மொழி.***—சிறையிருப்பின் காலத்திலிருந்து மொழியிலும் மாபெரும் மாறுதல்கள் வந்தன. கல்தேய, சீரிய மற்றும் பெர்சிய (மொழி) வடிவங்கள் மெள்ள மெள்ள உள் நுழைந்தன, மற்றும் நூற்றாண்டுகளின் ஓட்டத்தில், விளைவானது, பண்பற்ற இனங்கள்/காட்டுமிராண்டிகள் இத்தாலியில் படையெடுத்துச் சென்ற பிறகு ஏற்பட்டதைப் போன்றதாகவே இருந்தது. நவீன இத்தாலிய மொழி என்பது மிக மேன்மையான இலத்தீனுக்குள் வேர் கொண்டிருப்பினும் இது மேன்மையான இலத்தீன் மொழியாய் இருப்ப தில்லை. இது போன்றே, மேன்மையான எபிரெய மொழியானது செத்துப் போன ஒரு மொழியாயிற்று, மற்றும் கிறிஸ்தவத்தின் தொடக்க காலத்தில் பலஸ்தீனத்தில் அரமாயிக் மொழியானது பொதுவான பேச்சு வழக்கின் மொழியாக இருந்தது.

***3. மதம்.***—மதத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் பின்வருமாறு தொகுத்துரைக்கப்படலாம்:

*அ. விக்கிரகாராதனை என்றென்றைக்குமாக மறைந்து போகின்றது.—* அடிமைத்தனத்திற்கு முன்பு அவர்கள் புற இனத் தெய்வ வழிபாட்டைப் போலச் செய்ய நிலையான விருப்பம் கொண்டிருந்ததை நாம் கவனித்திருக் கின்றோம். கடைசியில் இது புறதெய்வயியலை கிளர்வூட்டிய வலிவான அருவருப்புகள் ஒவ்வொன்றும் ஒழிவதற்கு வழி ஏற்படுத்திற்று.

*ஆ. ஜெப ஆலயங்களின் எழுச்சி/வளர்ச்சி.*—பழைய ஏற்பாட்டில் ஜெப ஆலயங்கள் இருந்தமைக்கான தடயம் எதுவும் இருப்பதில்லை. இது தேவாலாய (ஆராதனை) ஊழியங்கள் இல்லாதொழிந்திருந்த அடிமைத் தனத்தின் போது உதயமாகியிருக்கச் சாத்தியக் கூறு உள்ளது. பத்து யூத ஆண்கள் இருந்தாலே ஒரு ஜெப ஆலயத்தைத் தொடங்கலாம் என்ற நிலை இருந்தது. எருசலேமில் நூற்றுக்கணக்கான ஜெப ஆலயங்கள் இருந்தன, மற்றும் பேரரசின் பெரு நகரங்களிலும் பல ஜெப ஆலயங்கள் இருந்தன. இவைகளின் (ஆராதனை) ஊழியங்கள், அன்றாடப் பலி செலுத்தும் வேளையின் தினசரி ஜெபங்கள், ஓய்வு நாள் (வேத) வாசிப்புகள், மற்றும் வேத வசனங்கள் மீதான விளக்கவுரைகள் ஆகியவற்றைக் கொண்டவை களாகவும், ஒரு ஆசீர்வாதத்துடன் முடிவடைவதாகவும் இருந்தன.

*இ. யூதப் பிரிவுகளின் எழுச்சி.*—யூதர்களில் பின்வரும் பிரிவுகள் இருந்தன: (1) பரிசேயர்கள்: இவர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தை வாய் மொழியாய்ப் பற்றியிருந்தார்கள். இது பாரம்பரிய வழிமுறையாக அவர்களுக்குக் கையளிக்கப்பட்டிருந்தது, இது எழுதப்பட்ட நியாயப் பிரமாணத்திற்கு இணையாக அதிகாரத்துவம் கொண்டிருந்தது. உயிர்த் தெழுதல் மற்றும் எதிர்கால வாழ்வு ஆகியவற்றின் போதனையை/ உபதேசத்தை அவர்கள் விடாது பற்றிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் மிகவும் கட்டுப்பாடான வகையில் விலகி நிற்பவர்களாயிருந்து, புற இனப்பழக்கங்கள் அறிமுகப் படுத்தப்படுவதை எதிர்த்து நின்றனர். உண்மையில் அவர்கள் நாட்டின் மிகச் சிறந்த பாகத்தினராயிருந்தனர், இவர்களே நாட்டை நாசப்படுத்தும் சக்திகளின் நடுவே நாட்டின் அடையாளத்துவத்தைக் காத்தனர். (2) சதுசேயர்கள்: மேற் கூறப்பட்ட எல்லாக் கருத்துக்களிலும் இவர்கள் பரிசேயர்களை எதிர்த்து நின்று, வாய்மொழி நியாயப்பிரமாணத்தின் அதிகாரத்தை மறுத்து, உயிர்த் தெழுதலையும் எதிர்கால வாழ்வையும் பற்றிய கொள்கையைப் புறக் கணித்து, தங்களிடத்திலிருந்த மற்ற இனங்களுடன் அவர்களின் பழக்க வழக்கங்கள் மற்றும் கருத்துக்கள் ஆகியவற்றுடன் தாராளமான தொடர்பை ஆதரித்து வந்தனர். அவர்கள் ரோமர்களுடன் சாதகமான நிலையில் இருந்து கொள்ளும்படி பரிந்துரைத்த அரசியல்வாதிகளாயிருந்தனர். பிரதான ஆசாரியர் வழக்கமாக சதுசேயக் குழுவைச் சார்ந்தவராகவே இருப்பார். (3) எஸ்ஸென்ஸ்கள்: இவர்கள் சமுதாயத்திலிருந்து விலகியிருந்து, திருமணம் முடிக்காது ஆழ்ந்த தியானத்தில் நேரத்தைச் செலவிடும் துறவிகளின் ஒரு சிறு குழுவாக இருந்தனர். இவர்கள் யூத சந்நியாசிகளாய் இருந்தனர்.

உலகத்தின் மாபெரும் யுகம் வந்த வேளையில் நாடு இப்படி இருந்தது, இனத்தின் நிலை இவ்வாறாக இருந்தது. ஆபிரகாமுடனான உடன்படிக்கை யின் மாம்சப் பிரகாரமான பகுதியானது அடையப்பட்டிருந்தது, மற்றும்

அது தனது பெரிய முன்னேற்றத்தை நீண்ட காலமாக அளித்து வந்திருந்தது. நீண்ட காலமாக நிழலிட்டுக் கொண்டிருந்த நூற்றாண்டுகளினூடே மாபெரும் தீர்க்கதரிசிகளினால் இன்னும் இன்னும் வலியுறுத்தப்பட்டிருந்த ஆவிக்குரிய பகுதியானது இப்பொழுது முழுமையான நிறைவேற்றத்தைக் காண வேண்டியதாக இருந்தது, யூதத்துவத்தின் முட்புதரானது முற்றிப் போய், இயேசுவாகிய கிறிஸ்துவின் உலகளாவிய ஆவிக்குரிய மார்க்கத்தை மலர்விப்பதற்குத் தயாராக உள்ளது.

குறிப்புகள்

[1]இவ்விடத்தில் டீன் "unwonted" என்று எழுதியிருந்தார். [2]Josephus, "Antiquities," Book XI, chap. viii. [3]அல்லது ஹஸ்மோனியஸ். [4]அல்லது ஹஸ்மோனியன்.